**ஆனமடுவ பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஆனமடுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து ஆனமடுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்க இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நாத்தாண்டிய பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வடமேல் மாகாண பொறியியல் திணைக்களத்திடமிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,500,000 மதிப்பீட்டு பெறுமதியான வாகனமும் அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தின் ரூபா 4,000,000 பெறுமதியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் பெறுமதியின் கீழ் 2022 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்தல் வேண்டும். | சொத்துக்களைப் பொறுபேற்று நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்ாய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 124,518,313 பெறுமதியான 03 கணக்கு மீதிகளானது நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | பட்டோலைகள், தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் உரிமை மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) | | | |
| விதி 218 | விசாரணைச் சபையின் மூலம் அனைத்து காணிகளும் கட்டிடங்களும் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவை பரீட்சித்தல் இடம்பெறவில்லை. | அறிக்கையை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பிரதேச சபை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 2,208,534 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,930,529 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமான ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ரூபா '000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீத வரியும் வரியும் | 5,682 | 6,207 | 3,027 | 14,481 | 5,687 | 5,593 | 1,950 | 12,918 |
| வாடகை | 18,595 | 17,693 | 16,605 | 1,751 | 18,223 | 11,547 | 11,256 | 868 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 605 | 534 | 534 | - | 605 | 353 | 353 | - |
| ஏனைய வருமானம் | 10,211 | 22,063 | 22,063 | - | 10,210 | 16,488 | 16,488 | - |
| மொத்தம் | 35,093 | 46,497 | 42,229 | 16,232 | 34,725 | 33,981 | 30,047 | 13,786 |

#### 2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரி அறவிட வேண்டிய 2603 தனியார் ஆதனங்கள் மற்றும் அரசாங்க துறையின் 105 ஆதனங்கள் தொடர்பான வீதவரி முறையே ரூபா 13,672,004 மற்றும் ரூபா 808,832 ஏக்கர் வரி ரூபா 422,652 கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை ரூபா 450,800 மற்றும் ரூபா 1,300,900 என்பவற்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க ஆதனங்களுக்காக கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தனியார் ஆதனங்களுக்காக நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் லேவண்டும். |
| (ஆ) | சபையினால் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வீத வரியினை திருதடதம் செய்ய வேண்டிய போதிலும் | மீண்டும் வீதவரியினை மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் வழங்கப்பட்டு வருகின்றது. | நாளதுவரையான மதிப்பீட்டிற்கு இணங்க வருமானம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டு வருகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | களஞ்சிய பேரேட்டின் பிரகாரம் நீண்ட காலமாக வழங்கப்படாது காணப்பட்ட ரூபா 539,898 இற்கு அண்மித்த பெறுமதியைக் கொண்ட 09 இருப்பு விடயங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வழங்கப்படாது காணப்படுகின்ற இருப்பு விடயங்களைப் பரீட்சித்துப் பார்த்து தேவைக்கு இணங்க அந்த இருப்பினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | தேவைப்பாட்டினை கவனித்துப்பார்த்:து கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டளவில் 7 தடவைகள் கேள்வி கோரியும் குத்தகைக்கு வழங்க முடியாதிருந்த ஆனமடுவ பொதச் சந்தை கட்டிடத் தொகுதியின் 20 கடைகள் ஆகக் குறைந்த கேள்விப் பெறுமதிக்கு இணங்க ரூபா 1,482,600 வருடாந்த வருமானத்தை சபை இழந்துள்ளதுடன் அக்கடைகள் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே இக்கடைகளுக்கு 2022 ஆம் ஆண்டின் போது கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்விப் பணத்தை குறைத்து அல்லது மாதாந்த வாடகை அடிப்படையில் கடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய ஆதனங்கள் கேள்வி கோரி வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத:துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் 16 ஆதனங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | உரிய ஆதனங்களின் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையில் 29 ஊழியர்களின் பற்றாக்குறையும் 44 ஊழியர்களின் மிகையும் காணப்படுகின்றது. | ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது . | சபைக்கு தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையை சரியாக இனங்கண்டு அந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்ளுதல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உள்ளக கணக்காய்வினால் வவுச்சர்கள், விடுமுறை நிர்மாண வேலைப்பிரிவின் கோவைகளை பரீட்சித்தல் என்பன தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | 2018 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நி.பி 133 (1) இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளபடுதல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இனங்காணப்பட்ட 11 நடவடிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 19 நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்ளமை 03 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் பலவீனங்களையும் இனங்கண்டு எதிர்பார்த்த செயல்முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |